திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லியிருக்கின்ற மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இந்த பேருந்து முன்பே இந்த வழியில் இயக்கப்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். அதற்காக என் தொகுதி மக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பேருந்து அங்கே மன்னார்குடியில் புறப்படுகின்ற நேரத்தில், இங்கேயும் அதே நேரத்தில் சென்னையிலேயிருந்து மன்னார்குடியை நோக்கி இதே வழியாகச் செல்வதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் 15 நாட்களுக்குள்ளே சென்னையிலிருந்து மன்னார்குடிக்கு பேருந்துகள் இயக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 245, டாக்டர் எம்.பி.சேகர், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

245—

அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் ஓட்டுநர் பணியிடங்களைப் பூர்த்தி செய்தல்.

* 21772—டாக்டர் எம். பி. சேகர்:

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் காலியாக உள்ள ஓட்டுநர் பணியிடங்களைப் பூர்த்தி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் 1992-93-ல் ஓட்டுநர்கள் பணியிடங்கள் அனைத்தும் நிரப்பப்பட்டுவிட்டன.

டாக்டர் எம். பி. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரெயிலில் முதல் வகுப்பில் பிரயாணம் செய்வதைக் காட்டிலும் மிகச் சிறந்ததாகக் கருதப்படும், முதல்வர்களுக்கு எல்லாம் முத்தான முதல்வர்

1994 ஏப்ரல் 11]

பொற்கால ஆட்சி நடத்தும் நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பெயரிலே நடத்தப்படும் டாக்டர் ஜெ.ஜெ. போக்குவரத்துக் கழகம்–ஜெ.ஜெ. என்று நடத்தும் போக்குவரத்துத் துறையிலே ஒரு பொலிவு பெறச் செய்யும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் மிகுந்த எனது பெரம்பூர் தொகுதியிலே ஓட்டுநர் பயிற்சிப் பெற்ற, வேலையில்லா இளைஞர்களுக்கு முன்னுரிமை கொடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு காலத்திலே இந்தியா முழுவதும் பல திட்டப் பணிகள் இருந்தன. ஆனால் இன்றைக்குத் தமிழகத்தை நோக்கி இந்தியா வந்துகொண்டிருக்கிற நிலையில், திட்டப் பணிகள் இன்றைக்கு நடைப்பெற்றுக் கொண்டிருப்பதற்கு காரணம் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு தான். மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற கேள்வி ஓட்டுநர் பணியிடங்களுக்கு வாய்ப்பு இருக்கிறதா என்பதுதான். அத்தனை ஓட்டுநர் பணியிடங்களும் நிரப்பப்பட்டு விட்டன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 246, திருமதி ஜீனத் சர்புதீன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

246—

சேப்பாக்கம் தொகுதி குடிசை வாழ் மக்களுக்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டும் திட்டம்.

* 25298—திருமதி ஜீனத் சர்புதீன்:

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்க்கு விடையளிப்பாரா—

சேப்பாக்கம் தொகுதி, விக்டோரியா விடுதி பின்புறம் மற்றும் பார்டர் தோட்டத்தில் வசித்து வரும் குடிசை வாழ் மக்களுக்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.